திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, 500 எக்கர்களுக்கு மேற்பட்ட பாசன வசதி உள்ள ஏரிகளுக்கெல்லாம், தூர் எடுத்து நவீனப்படுத்தும் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அது மிக நல்ல திட்டம். வரவேற்பதோடு, தஞ்சை மாவட்டத்திலே, வடுவூரில் இருக்கக் கூடிய ஒரு பெரிய ஏரி தூர்ந்து வருகிறது. அது 500 ஏக்கருக்கு மேல் பாசன வசதி பெறக்கூடிய ஏரி என்பதன் காரணமாக, வரக்கூடிய அந்த வேலை பருவத்திலேயே, இந்த வடுவூர் ஏரியையும் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ள முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இந்த நீர்ப் பங்கிடு புதிதாக, வாட்டர் மானேஜ்மெண்ட் என்பதை மையமாக வைத்துச் செய்யப்படுகிறது. தூர் எடுப்பது என்பது மட்டும் அல்ல, அந்தக் கண் மாயிலே செல்லக்கூடிய கால்வாய்களை நவீனப்படுத்தி, 25 அல்லது 50 ஏக்கர்களுக்குச் சிறு மதகுகளை வைத்து, சிக்கனமான முறையிலே நீர்ப் பங்கிடு செய்வதைப்பற்றி ஒரு பரீட்சார்த்தமாக நாம் இப்பொழுது செய்து கொண்டிருக்கிறோம். தூர் எடுக்கிற வேலை இப்பொழுது எல்லா இடங்களிலும் இந்த வறட்சிக் காலத்தை ஒட்டி செயல்படுத்த வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை ஏதாவது ஒரு இடத்திலே எடுத்து, செயல் முறையிலே நாம் வெற்றி கண்டபிறகு அனைத்து திட்டங்களுக்கும் அதை நாம் அமுல்படுத்தலாம்.

திருமூர்த்தி அணையருகே மற்றொரு அணை கட்டும் திட்டம்.

* வினா எண். 938—திரு. கு. ரமணி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், உடுமலை தாலுகா திருமூர்த்தி அணையருகில் ஒரு கோடி செலவில் மற்றொரு அணை கட்டும் திட்டமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மூலம் எவ்வளவு நிலத்துக்கு பாசன வசதி ஏற்படும் ?

(இ) இத் திட்டம் ஆரம்பித்து முடிய எவ்வளவு காலம் பிடிக்கும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) திருமூர்த்தி அணை, பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில் உள்ளடங்கியது. பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தின் கீழ் மேலும் பாசன வசதியைப் பெருக்கப் போதுமான பாசனவளம் ((Irrigation potential)) இல்லை. ஆகவே, மற்றொரு

1981 ஏப்ரல் 29]

அணை கட்டுவது சாத்தியமில்லை. ஆனால், பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் திறமையாகச் செயல்படுவதற்கும் அதிக மின்விசை உற்பத்தி செய்வதற்கும் மேலும் ஒரு அணை கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. இதற்கான ஆய்வுப் பணிகளின் முதல்நிலை வேலைகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) மற்றும் (இ): இவ் வினாக்களுக்கு இடமில்லை.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, தற்போது திருமூர்த்தி அணைக்கு வருகின்ற தண்ணீர் முழுவதும் பரம்பிக்குளம் அணைக்கட்டிலிருந்து கோண்டூர் கனால் மூலமாக வந்து சேருகிறது. அந்தத் தண்ணீர் பாசனத்திற்குப் போதுமானதாக இல்லையென்ற புகார்கள் ஏராளமான விவசாயிகளிடமிருந்து வந்திருப்பது உண்மை. அதை மாற்றுவதற்காக, ஒரு புதிய அணைக் கட்டுத் திட்டம் கொண்டு வருவது வரவேற்கத் தக்கது. ஆனால், அந்த அணைக்கட்டிற்கு எந்த ஆற்றிலிருந்து, எந்த நீர்ப் பகுதியிலிருந்து தண்ணீர் கிடைக்கும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இப்பொழுது கூட நல்லாறு நீர்ப் பிடிப்புப் பகுதியில் ஒரு ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. திருமூர்த்தி அணைப் பகுதிக்கு அப்பாற்பட்டு, நல்லாறு நீர்ப் பிடிப்பு பகுதி இருக்கிறது. அது ஒரு ஸ்டோரேஜ் டாங்க் என்கிற அளவிலே வரும். அணைக்கட்டு என்று சொன்னால், புதிதாக, ஆற்றிலே சென்று கொண்டிருக்கிற நீரைத் தேக்கி வைப்பது. இது அப்படி அல்ல. ஏற்கனவே அணையிருக்கிறது. கூடுதலாக ஸ்டோரேஜ் கட்டுவது என்கின்ற திட்டம் அந்தப் பகுதியிலே ஆய்விலேயிருக்கிறது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அப்படியானால் அந்த அணைக் கட்டு மழைக்காலத்தில் ஏற்படுகின்ற மிச்சத் தண்ணீரைச் சேமித்து இந்த அணைக்கட்டிலே நிரப்புவது, அதன்மூலம், பாதுகாப்பது என்பதுதானா இந்தத் திட்டத்தினுடைய நோக்கம். அப்படியானால், மழையில்லாத, மழை குறைவாகப் போகும் நேரத்தில், வறட்சி நிலை ஏற்படுமானால், இந்த அணைக் கட்டிற்கு நாம் செலவழிக்கும் அந்தப் பணத்திற்குத் தேவையான வருவாயோ, நீரோ கிடைக்காமல் போகுமா, இல்லையா? அதைப்பற்றி அரசின் கருத்து என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இந்த ஸ்டோரேஜ் டாங்க் பொறுத்தவரையிலும், அதிலே நாம் வரவு-செலவு பார்க்க முடியாது. உபரியாக நீர் கிடைக்கும்போது, நாம் சேமித்து வைத்தால், ஏதோ 3 ஆண்டுகள், 4 ஆண்டுகளுக்கொரு முறை பருவ மழை பொய்த்துப் போகின்ற

பொழுது, இப்பொழுது ஏற்படுகின்ற மாதிரியான வறட்சி நிலைமை வரும் போது, அந்த அணையைப் பயன்படுத்துவது என்பது முக்கியமான ஒன்று. எனவே, அது வரவேற்கத்தக்க திட்டமே தவிர, அதிலே செலவு எவ்வளவு, வரவு எவ்வளவு என்று நாம் கணக்கு பார்க்க வேண்டியதில்லையென்று கருதுகிறேன்.

உத்திரமேரூர் தாலுகாவில் "இடமிச்சி" ஏரித் திட்டம்.

*வினா எண். 939—திரு. எஸ். ஜகத்ரட்சகன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் தாலுகாவை சார்ந்த "இடமிச்சி ஏரித் திட்டம்" எந்த நிலையில் உள்ளது?

(ஆ) எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ) உத்திரமேரூர் அணைக்கட்டிலிருந்து துணைக் கால்வாய் மூலம் இடமாய்ச்சி ஏரிக்குத் தண்ணீர் வழங்கும் திட்டம் தலைமைப் பொறியாளரின் ஆய்வு ஆய்வில் உள்ளது.

கூம்புப்பள்ளம் அணைத் திட்டம்.

*வினா எண். 940—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலம் வட்டம் கூம்புப்பள்ளம் அணைத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) ஆம்.

(ஆ) இத் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு, விவர மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தள அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஆய்வில் உள்ளது என்று சொன்னார்கள். அதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது? எவ்வளவு பாசன வசதி பெறும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?